**மாகாணக் கல்வித் திணைக்களம் - சப்பிரகமுவ**
**வாராந்தப் பாடசாலை**

| | |
|---|---|
| பாடம் - மனைப் பொருளியல் | வாரம் : **10** |
| தரம் - 10 | தயாரிப்பு : M.L.F. சஹீகா<br>கே/ தெஹி / சுலைமானியா கல்லூரி<br>கன்னத்தோட்டை |

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1) உலக சுகாதார தாபனத்தின் கூற்றுப்படி கட்டிளமைப் பருவம் எனப்படுவது
   1. 10 – 13 வயது வரையான காலப்பகுதி
   2. 10 – 24 வயது வரையான காலப்பகுதி
   3. 14 – 16 வயது வரையான காலப்பகுதி
   4. 17 – 19 வயது வரையான காலப்பகுதி

2) கட்டிளமைப் பருவத்தில் தோற்றத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு காரணமாக அமைவது,
   1. பாலியல் ஓமோன்களின் தன்மை
   2. உள வளர்ச்சியின் தன்மை
   3. சமூக வளர்ச்சியின் தன்மை
   4. சூலகம் கருப்பை ஆகியவற்றின் விருத்தித் தன்மை

3) கட்டிளமைப் பருவத்தின் முதற்பாலியல்பு ஒன்று
   1. சூழகம், கருப்பையின் விருத்தி
   2. மார்பகங்கள் பருத்தல்
   3. எடை அதிகரித்தல்
   4. உயரம் அதிகரித்தல்.

4) பெண் துனைப்பால் இயல்புகளைத் தூண்டும் ஓமோன் எது?
   1. தெஸ்தெஸ்ரோன்
   2. ஈஸ்ட்ரஜன்
   3. பிடியூட்டரின்
   4. திருச்சின்

5) கட்டிளமைப் பருவ ஆண் பிள்ளையின் விருத்தி வேகம் ஆரம்பிக்கும் வயது
   1. 10 வயது
   2. 12 வயது
   3. 14 வயது
   4. 16 வயது

6) கட்டிளமைப் பருவ பிள்ளையின் உளவிருத்தியை வெளிக்காட்டும் இலட்சணங்களில் ஒன்று
   1. சம வயதினருடன் தொடர்பு கொள்வதில் ஈடுபாடு
   2. தர்க்க ரீதியான் சிந்தனை
   3. வீர வணக்கம்
   4. உடலுருப்புக்களின் வளர்ச்சி

7) அறிதல் ஆட்சியின் அறிவுத் திறன் மற்றும் படைப்புத் திறனை விருத்தி செய்து கொள்ளும் திறன் எவ்வாறு அழைக்கப்படும்.
   1. சமூகத் திறன் விருத்தி
   2. உள விருத்தி
   3. மன வெழுச்சி விருத்தி
   4. உடல் விருத்தி

8) ஒவ்வொரு வயதினடிப்படையிலும் சமூகத்தில் அங்கீகரிக்கப்பட்ட நடத்தைக் கோலத்ததுக்கு இசைவாக்கமடைய முடியாத நிலையில் உள்ள பிள்ளை எவ்வாறு அழைக்கப்படும்.
   1. உள விருத்தியடைந்த பிள்ளை
   2. நெறிபிறள்வான பிள்ளை
   3. செயற்றிறன் குறைந்த பிள்ளை
   4. தன்னாற்றல் நிறைந்த பிள்ளை

9) கட்டிளமைப் பருவ ஆண், பெண் இருபாலாரினதும் துணைப் பிரிவு இயல்புகள் தோன்றக் காரணமாக அமைவது

1. உடற் பயிற்சி
2. பரம்பரை
3. நிறையூட்டம்
4. பாலியல் ஓமோன்கள்

10) கட்டிளமைப் பருவத்தினரில் காணக்கூடிய சமூக விருத்திப் பண்புகளுல் ஒன்று

1. சந்தர்ப்பத்துக்கு ஏற்ப செயற்படும் திறன்
2. தலைமைத்துவத்தை ஏற்கக் கூடிய ஆற்றல்
3. சுதந்திரமாக செயற்படுவதை வெளிக்காட்டுதல்
4. பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன்

# பகுதி – II

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1) கட்டிளமைப் பருவத்தில் உடலியல் ரீதியாக ஏற்படும் மாற்றங்களைக் குறிப்பிடுக.
2) கட்டிளமைப் பருவத்து இளைஞர்களால் சமூக விருத்தியின் போது காட்டப்படும் சிறப்பியல்புகளை விளக்குக.
3) பூப்படையும் வயதை நிர்ணயிக்கும் காரணிகள் எவை?
4) ஆண், பெண் துணைப்பாலியல்புகளை அட்டவணைப் படுத்துக.
5) ஆண், பெண் இருவருக்கும் பொதுவான துணைப்பால் இயல்புகள் மூன்று தருக.
6) கட்டிளமைப் பருவ மனவெழுச்சி வெளிப்பாட்டின் இயல்புகள் எவை?
7) கட்டிளமைப் பருவப் பிள்ளைக்குப் பொருத்தமான பகல் உணவு வேளையைத் திட்டமிடுக.